✦ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 9 றம்ழா 22 இதழ் 129

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23-6-84

RECEIVED 26-6-1984 PERIODICALS

## கடலில் கண்டெடுக்கப்பட்ட பிள்ளையார் சிலை!

[திருகோணமலை]

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தில் கடற்கற்பாறைகளில் சிக்குண்டு கிடந்த மிகத் தொன்மைவாய்ந்த பிள்ளையார் சிலையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சிலையைத் திருகோணமலை கோணேஸ்வரர் கடற்பிராந்தியத்தில் வாதுவையைச் சேர்ந்த பி. இராஜசூரிய என்ற சுழியோடியே கண்டுபிடித்துள்ளார்.

இவர் வெளிநாட்டு உல்லாசப்பயணி ஒருவரின் துணையுடன் இப்பகுதியின் கடற்பாறைகளில் சுழியோடிய நேரத்தில் கற்பாறைகளில் சிக்குண்டு கிடந்த இச்சிலை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஐம்பொன்னினால் செய்யப்பட்ட இந்தப் பிள்ளையார்சிலை 18அங்குல உயரமும், 70 ருத்தல் நிறையும் கொண்டது. சிலையின் வலதுகை உடைந்த நிலையில் உள்ளது.

திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்ணன்டோவிடம் இச் சிலை, அவரது அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

இச் சிலை திருகோணமலை புதைபொருள் ஆராய்ச்சிநிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1623ம் ஆண்டு கோணேஸ்வரர் ஆலயம் ஒல்லாந்தரினால் இடிக்கப்பட்டபோது அவர்களினால் பெயர்க்கப்பட்ட சிலையாக இருக்கலாமென்று நம்பப்படுகிறது. [சு]

## பல்கலைக்கழக சம்பவங்கள்

# வட. பயங்கரவாதிகளுக்கும் தொடர்புண்டு!

## செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் லலித் தகவல்

### "பாடசாலை மாணவர்களை திங்கட்கிழமை குழப்பத்தில் ஈடுபடுத்தவும் திட்டம் உண்டு"

(இ. கந்தசாமி)

"பேராதனையிலும், கொழும்பிலும் குழப்பத்தைத் தூண்டிவிட்ட தீவிரவாதிகளுக்கும் வடபகுதியில் இயங்கும் சில பயங்கரவாதக் குழுவினருக்குமிடையே தொடர்புகள் இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதுவரை நூறுபேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்" என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்றுத் தெரிவித்தார்,

நேற்று மாலை அமைச்சர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

### கைதானோரில் பிக்குகள்

"நூறு பேர் கைதுசெய்யப்பட்டபோதிலும் அவர்கள் தொடர்ந்து காவலில் வைக்கப்படுவார்கள் என்று அர்த்தம் இல்லை. கைதானவர்களில் அதிகமானோர் விசாரணைக்காகவே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அதே நேரத்தில் கைதுசெய்யப்பட்டவர்களில் பிக்குகளும் இருப்பதாக அறிகின்றேன்.

### யாழ். மட்டக்களப்பு. பல்கலைக்கழகங்கள்

"பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருக்கும் அதேநேரத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும், மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியும் மூடப்படவில்லை. காரணம் அங்கு குழப்பம் எதுவும் நடக்கவில்லை. சில கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் வகுப்புக்களைத் தொடர்ந்து பகிஷ்கரித்து வருகின்றனர். அதே நேரத்தில் அவர்களது கோரிக்கைகள் தொடர்பாக என்னுடன் பேச்சுநடத்த விரும்புகின்றனர். பேச்சுவார்த்தைக்கு நான் எப்பொழுதும் தயார்.

### 'இவர்களும்' சம்பந்தம்

"பல்கலைக்கழக சம்பவங்களில், பல்கலைக்கழக உயர்மட்ட உத்தியோகத்தர்கள் சிலரும் சம்பந்தப்பட்டதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

### பாடசாலை மாணவர்களை

"எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகள் ஆரம்பமாகும் போது மாணவர்களைக் குழப்பத்தில் ஈடுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக

(8ம் பக்கம் பார்க்க)

## கைதானோரில் பிக்குகள்!!

## 'லலித்' விஜயம்

(கொழும்பு)

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இம்மாதம் 28-ம் திகதி புதுடில்லி செல்லவுள்

(8ம் பக்கம் பார்க்க)

## 'வாசு' கைது!

(கொழும்பு)

நவலங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரா மீண்டும் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கையில்-: "தங்களுக்குக் கிடைத்த சில தகவல்களின் பேரில் வாசுதேவ நாணயக்காராவை விசாரணைக்காகத் தடுத்து வைத்துள்ளதாகக் கூறினர். (இ-வெ)

## வண. சிங்கராயர் 'லலித்'துக்கு கடிதம்

(கொழும்பு)

"தடுப்புக் காவலில் இருக்கும் வண. சிங்கராயர் எனக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளார்" என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

"நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் தப்பிச்செல்ல விரும்பவில்லை ஓடவும் மாட்டேன் வழக்கு விசாரணை நடைபெற்று நான் நிரபராதி என்பதை நிரூபிப்பதையே விரும்புகின்றேன்" என்று அந்தக் கடிதத்தில் வண. சிங்கராயர் குறிப்பிட்டுள்ளார்" என்று தெரிவித்த அமைச்சர் லலித்;

வண. சிங்கராயர் கொழும்பில் இராணுவ முகாமில் இல்லை என்றும் அவரது கோரிக்கையின்மீது, பாதுகாப்புக்கருதி மட்டக்களப்பு இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.

## பாராளுமன்றத்தில் அனுரா:

# நிர்மலா சிறைமீட்பு வெட்கக்கேடு!

(இ. கந்தசாமி)

"மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து திருமதி நிர்மலா நித்தியானந்தன் சிறைமீட்கப்பட்டது வெட்கக்கேடு. ஐ. தே, கட்சி அரசாங்கத்தின் பாதுகாப்புச் சேவைத் திறனை இந்த விவகாரம் எடுத்துக்காட்டுகிறது" என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு, அநுரா பண்டாரநாயக்கா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவசரகாலச் சட்டம் நீடிப்பு பிரேரணை மீது, திரு. அநுரா பண்டாரநாயக்கா பேசினார், அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"எட்டு மாதத்துக்கு முன்னர், மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து 250 பேர் சிறைமீட்கப்பட்டனர். அப்படியான ஒரு சம்பவம் நடந்த பின்னரும் நிர்மலாவையும், வண. பிதா சிங்கராயரையும் ஏன் அந்தச் சிறையிலேயே வைத்திருக்கிறீர்கள்?

"இப்போது அமெரிக்காவில் இருக்கும் நித்தியானந்தன் உட்பட இருநூற்றைம்பது கைதிகள் அணிவகுத்து வெளியே சென்றபின்னர்கூட, 'புத்தி' வரவில்லை. நிர்மலாவையும், வண. பிதா சிங்கராயரையும் சிங்களப் பகுதிச் [illegible]

(8ம் பக்கம் பார்க்க)

## பம்பாயில் இனக்கலவரம்

புதுடில்லி, ஜூன் 22

பம்பாயில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் ஒருவர் பலியானதாகவும், 18 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இங்கு இரு பிரிவினர்களுக்கிடையே இடம்பெற்ற கைகலப்பையடுத்து, அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் தற்போது நீக்கப்பட்டுள்ளது.

### இந்திரா பேட்டி

அதேவேளை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில், "பாகிஸ்தான்ஊடாக பஞ்சாப்பிற்கு பெருமளவு ஆயுதங்கள் கடத்தப்பட்டது தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் [illegible]

(8ம் பக்கம் பார்க்க)

## கொள்ளை முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

சங்கானையிலுள்ள யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலக ஊழியரின் சம்பளப் பணம் 22,146 ரூபா 56 சதத்தை இரு இளைஞர்கள் துப்பாக்கி முனையில் கொள்ளை அடிக்க எடுத்த முயற்சி பொது மக்களின் எழுச்சியால் தோல்வியில் முடிந்தது.

யாழ். கன்னாதிட்டி வங்கியிலிருந்து சங்கானை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் க. சிவபாதம் ஊழியரின் சம்பளப் பணத்தை எடுத்துக்கொண்டு காரியாலயத்திற்கு செல்லும் வழியில் இக் கொள்ளை முயற்சி நடந்தது.

காரியாலயத்திற்கு 50 யார் தூரத்தில் செல்லும் போது சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் துப்பாக்கியைக்காட்டி பணப்பையை கொள்ளையடிக்க முயற்சித்தபோது 'இப்பணத்திற்கு நான்தான் பொறுப்பு என் உத்தியோகம் போய்

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு 54 கோடி 10 லட்சம் டாலர் உதவி

பாரிஸ், ஜூன். 22

பாரிஸில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கைக்கு 54கோடி 10 லட்சம் டாலர்களை உதவியாக வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியுதவி கடந்தவருடத்திலும் பார்க்க 14.4 சதவீதம் அதிகமானதாகும்.

கடந்தவருடம் 47 கோடி 30 லட்சம் டாலர் உதவியாக வழங்கப்பட்டது,

இந்த நிதிஉதவி உணவுவழங்குவதற்கும், மகாவலித்திட்ட அபிவிருத்தி வேலைகளுக்கும் பயன்படுத்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் சார்பில் இக்கூட்டத்தில் நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் கலந்துகொண்டார்.

இலங்கையின் தற்போதைய அரசியல்நிலைபற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. (வெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வேம்படி வீதியில், மூன்றும் குறுக்குத்தெருவுக்கு அண்மையில் வீட்டுடன் கூடிய மூன்று பரப்புகாணி நான்கு படுக்கை அறைகள், சமயலறை, கராஜ், தோட்டம் மற்றும் சகல நவீன வசதிகளும் உண்டு. தொடர்பு: கொள்க. 18, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 431

நல்ல நிலையில் 20'' Sony (கலர்) TV., KV - 2022 - AN வயலெஸ் ரிமூட் கொன்ரோல். 131, அரசடிரோட், கந்தர் மடச்சந்தி. 430

நல்ல நிலையிலுள்ள அச்செழுத்துக்களுடன் றபர் சீல் தயாரிக்கும் உபகரணங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.V. குணபாலன், வசிவாச் வேக்ஸ், சாந்திசினிமா முன்பாக, யாழ்ப்பாணம். 334

கிளிநொச்சியிலிருந்து 6மைல் தூரத்தில் வட்டக்கச்சியில் 2 ஏக்கர் அதிக பிரயோசனமுள்ள காணியும் 3 ஏக்கர் 2 போக வயலும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விளம்பர இல. 374 C/o. ஈழநாடு. யாழ்ப்பாணம். 374

சுன்னுகம் இலங்கை வங்கி ஒழுங்கையில் பிரதான வீதியில் இருந்து 400 யார் தூரத்தில் வீடு கட்டுவதற்கு உகந்த ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S. S. ராஜா, 6, குருசோல்ற் வீதி, (அச்சுக்கூட வீதி வழியாக), சுண்டிக்குளி. 421

HY - LINE ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும் லக்ஷ்மி றேடஸ், இணுவில் வீதி, மானிப்பாய். துர்க்கா என்ரபிறைஸ் கே.கே. எஸ்.றோட், இணுவில், (அண்ணு இன்டஸ்றீஸ்). 425

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகல தளபாட வசதிகளுடன் தற்போது இயங்கிவருகின்ற தனியார் கல்வி நிறுவனம் ஒன்று விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: C/o ஈழநாடு, விளம்பர இல: 396, யாழ்ப்பாணம். 396

மயிலிட்டி V. C. றோட்டில் கிராம சபைக்கு அருகில் 20 பரப்புக் காணியும், கைதடி கண்டி றோட்டில் வீடு கட்டுவதற்கு உகந்த காணி 20பரப்பும் (மின்சார வசதியுடன்), தொழிற்சாலைக்கு உகந்த காணி 40 பரப்பும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. திருநாவுக்கரசு, 415, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 395

ஜூலை கலவரத்தின்போது பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள 38 ஸ்ரீ 4181 இலக்கமுடைய டெலிகாவான் உதிரிப்பாகங்கள் நல்ல நிலையில் உள்ளது. பொடி எரிந்துள்ளது. மேற்கண்ட விலாசத்தில் பார்வையிட்டபின் விலைகோரலாம். நியாயமான விலை கோருபவருக்கேவிற்கப்படும். தொடர்பு: எஸ். புவேந்திரநாதன் (பத்தமேனி), ஸ்ரீமுருகன் ரேடேஸ், அச்சுவேலி. 375

கொக்குவில் சந்திக்கும் பூநாரி மரத்தடிக்கும் இடையில் கே. கே. எஸ். வீதியில் இருந்து கிழக்கு நோக்கிய ஒழுங்கையில் 50 யார் தூரத்தில் 2¾ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. பெரிய தபாற் கந்தோர், பாடசாலை வசதிகள் உள்ளன. தொடர்பு: மினி ரேட்ஸ் சென்ரர், இல: 3, ஸ்ரான்லி வீதி, லிடோ தியேட்டர் முன்பாக, யாழ்ப்பாணம். 384

## தேவை

மொனிட்டர்ஸ் (Monitors) கொப்பிகள் வெட்டக்கூடிய மெசின் (Cutting Machine) தேவை சத்தியமூர்த்தி, ''கோகுலம்'' இணுவில் றோட், மானிப்பாய். 401

அனுபவம் வாய்ந்த மெசின் மைண்டர்கள், கொம்பசிட்டர்கள் உடனடியாகத் தேவை. இரண்டும்தெரிந்தவர்கள்விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ளவும், சந்திரா அச்சகம், காங்கேசன்துறை. 426

யாழ்ப்பாணத்து வேளாள உயர்குலத்தை சேர்ந்த 37 வயதுடைய மணமகனுக்கு (estate Supdt) ரூபா 6000/- மேற்பட்ட மாதவருமானமுள்ளவரும் முதுசசொத்துக்களும் உடையவருக்கு அழகானபடித்த ஆங்கில பேச்சுத்திறனுடைய30வயதுக்குட்பட்ட அதேகுலத்தைச் சேர்ந்த பெண்தேவை. சீதனம் முக்கியமானதல்ல. முதல் கடிதத்திலேயே சாதகக்குறிப்பையும் எதிர்பாக்கிறோம். விளம்பர இல. 400 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 400

## வகுப்புக்கள்

ரெலிவிசன், வீடியோ-டெக்றிப்பியறிங், வயறிங், வெல்டிங், ஏயர்கொண்டிசனிங் இரண்டுமாத முழுநேர செய்முறைப் பயிற்சியுட்பட பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம் 23-06-84 Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, (றெயில்வேகடவையருகாமை) யாழ்ப்பாணம். 393

விஞ்ஞான முறையில் சட்டை வெட்டித் தைத்தல், கேக்ஐசிங், சிற்றுண்டிவகைகள் தயாரித்தல், Hair Styles, பூக்கள் தயாரித்தல் ஆகியவற்றிற்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சேர விரும்புவோர் ஞாயிற்றுக்கிழமைகளில் 2 மணிக்கிடையில் தொடர்பு கொள்க. 'The Ladies Academy' இல. 27/3-வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, (சாமி அன் கோ அருகாமையில் உள்ள ஒழுங்கை முடிவிலுள்ளது) யாழ்ப்பாணம். 337

## WANTED

A part time Accounts Clerk Cum book - keeper - apply: Registrar, Patrician Institutes, 59, St. Patrick's Road Jaffna. before 28-06-1984. 399

## விற்பனைக்கு

நல்லூர் வைமன் வீதியில் கோயிலுக்கு அருகாமையில் 2·2 பரப்பில் அமைந்த நல்ல குடிநீரும், சுற்றுமதிலும், சகல வசதியுமுள்ள 4 அறை புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 22/2, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 389

### கொக்குவிலில் வீடு கடைஉடன் விற்பனைக்கு

கொக்குவில் - காங்கேசன்துறை வீதியில் இந்துக் கல்லூரிக்கு மிகவும் அண்மையில்பிரசித்தமான சந்தியில் இரு அறைகளைக் கொண்ட வீடும் காணியும் உடன் விற்பனைக்குண்டுஒருபகுதி கடையாகவும் பாவிக்க உகந்தது. தொடர்பு கொள்க: சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் ஜே. பி. யு. எம்., கண்டிவீதி, சாவகச்சேரி, தொலைபேசி 2[illegible] சாவகச்சேரி. 366

## WANTED

Wanted Secretary for Jaffna Y· M, C. A. — with good knowledge of English and typing. Salary negotiable. Apply before 15th July to President, Y.M.C.A. Weaver lodge, Vembadi Road, Jaffna. 409

### சயன்ஸ் அக்கடமி
### அச்சுவேலி
### A/L 86

தூய, பிரயோக கணிதம்

திரு. வெக்டர்

யூன் 30 சனி 3மணி

415

S, C, மகாதேவா
சட்டத்தரணி
'கமலகம்'
புங்கன்குளம் வீதி
கொழும்புத்துறை

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம், அரியாலை, இல. 90, சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த கந்தையா குணரெட்ணம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் கந்தையா குணரெட்ணம் கைம்பெண் சற்குணம், இல. 90. சுப்பிரமணியம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்க } இல. த/3791

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1984ம் ஆண்டு ஆனி மாதம் 29ம் நாளன்று 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை, ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

1984ம் ஆண்டு வைகாசி மாதம் 7ஆந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. 382

''UNIFO, Palaly Road, Urumpirai,

will be in a position to hire out a Van, Lorry and Tractor, either on casual basis, or on contract for short periods. Interested parties are required to contact our Factory Manager.

UNIFO may also recruit the services of well recommended drivers.''

### தொழில் நுட்ப, க. பொ. த (சா. த/உ. த) மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

01. City and Guilds பரீட்சை 1985
 I. Elect. Eng. Tech. பகுதி I, II, III.
 II. Tele. Com. Tech, பகுதி I, II, III.
02. கொம்பியூட்டர் I.D.P.M பகுதி I, II. III.
03. AIR CONDITIONING பயிற்சி

ஆரம்பம் 27-06-1984

விபரங்களுக்கு: நிர்வாகி

## AUTO COOL ENGINEERS,

சாந்தி சினிமாவுக்கு அருகாமையில்
யாழ்ப்பாணம் 429

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing: P.C ஒருபிரதி ரூபா 6.50,

## கொழும்பு ஸ்ருடியோ

ஜே என்ரப்பிரைசஸ்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

சவுதியில்:-

சாரதிகளும்
கூலியாட்களும்

உடன் தேவை: 3 கிழமைகளுக்குள் அனுப்பப்படும்.

பாஸ்போட், சமயச்சான்றிதழ், பாஸ்போட்டில் உள்ள படம் 6 என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

### T துரைசிங்கம்

மல்வம்,
(உடுவில் மகளிர் பாடசாலைக்கு அருகாமையில்)
உடுவில், சுன்னுகம்.

விண்ணப்பம் இன்றிலிருந்து பாரம் எடுக்கப்படும்.

Labour Licence No: 426
No: M/ D/ A 12627

427

## சிசில் குளிர்சாதனப் பெட்டிகள் (SISIL REFRIGERATORS)

பாவனையாளர்களுக்கு ஓர் அருமையான வரப்பிரசாதம்

★ குளிர் சாதனப் பெட்டியின் மோட்டருக்கு (COMPRESSOR UNIT) இப்பொழுது ஐந்துவருட உத்தரவாதம். மற்றைய உறுப்புகளுக்கு ஒரு வருட உத்தரவாதம்.

★ விற்பனைக்கு பின்பு தாமதமற்ற சேவையும், சகல உதிரிப் பாகங்களும் எம்மிடமே பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரேயொரு குளிர் சாதனப் பெட்டி சிசில் மாத்திரமே.

★ டபிள் டோர் (DOUBLE DOOR) குளிர்சாதனப் பெட்டிகள் கவர்ச்சிகரமான வர்ணத்தில் வந்துள்ளது.

விலை ரூ. 8300/- தொடக்கம் ரூ. 10,350/- வரை

★ குளிர் சாதனப் பெட்டிகள் பழுதடைந்து விட்டதா? அனுபவம் வாய்ந்த தொழில் நுட்பர்களால் பழுது பார்த்தல், விரும்பிய நிறங்களில் வர்ணம் அடித்தல் போன்ற வேலைகளை மிகச் சகாயமான செலவில் உத்தரவாதத்துடன் நேர்மையாக செய்து கொடுக்கப்படும்.

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள் :

## சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்றெற்

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி. 22134

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மதுபானம், போதைவஸ்துதான் உலகின் இன்றைய பொது எதிரி!

## கருத்தரங்கில் சுவீடன் பிரதிநிதி

(க. ஜீவகதாஸ்)

உலகில் உள்ள ஒவ்வொரு நாடுகளிலும் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. ஆனால் சகலநாடுகளிலும் இன்று மதுபானமும், போதைவஸ்துகளும் பெருகிவருகின்றன. இளைஞர்கள் மத்தியில் மதுபானம்-போதைவஸ்து பாவிப்பது பெருகி வருவதை புள்ளி விபரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது மிகவும் ஆச்சரியத்தைக் கொடுப்பதாகவுள்ளது. சகல நாடுகளுக்கும் பொதுவாகவுள்ள இப்போது எதிரியை ஒழிப்பதற்கு சகல நாடுகளிலும் உள்ள இளைஞர் அமைப்புகள் முன்வரவேண்டும். இல்லையானால் இப்போது எதிரி உலக சமுதாயத்தையே அழிவுப்பாதையில் நிச்சயம் இட்டுச்செல்லும்.''

இவ்வாறு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறும் மூன்றும் மண்டல நாடுகளின் அபிவிருத்திக்கு இளைஞர்களின் பங்களிப்பு'' எனும் தலைப்பிலான ஒருவாரக் கருத்தரங்கினை ஆரம்பித்து வைத்த சர்வதேச நல்லொழுக்க வாலிபர் இயக்கப்பேரவையின் தலைவர் திரு டாக் என்டால் (சுவீடன்) உரையாற்றும்போது தெரிவித்தார்.

தென் கிழக்கு ஆசியாப்பகுதிக்கான இக்கருத்தரங்குகளை இலங்கை நல்லொழுக்க வாலிபர் இயக்கம், இலங்கை மன்றக்கல்லூரி, இலங்கை அபிவிருத்திஸ்தாபனம் ஆகியவை ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இலங்கை மன்றக்கல்லூரியின் உதவி இயக்குநர் டாக்டர் எல். பி. மெடிஸ் தலைமையில் நடைபெற்ற ஆரம்பவிழாவில் சர்வதேச நல்லொழுக்க இயக்கத்தின் சர்வதேசச் செயலாளர் திரு. கெல்கே. கே. கொல்ஸ்டாட் (நோர்வே) சர்வதேச நல்லொழுக்க வாலிபர் இயக்கப் .பேரவையின் கமிட்டி உறுப்பினர்கள் உட்பட மாலைதீவு, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் பங்கு கொண்டிருந்தனர்.

திரு. டாக் என்டால் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

''மூன்றும் மண்டல நாடுகளின் அபிவிருத்திக்கு இளைஞர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டிய அவசியம் இன்று எழுந்துள்ளது. நாடுகளின் அபிவிருத்திப்பணிகளை அவ்வவ் நாடுகளின் அரசாங்கங்கள் மட்டும் தான் செய்ய வேண்டும் என்ற நிலையினை மாற்றி இளைஞர்களாலும் பல்வேறு விதமான ஆக்கபூர்வமான அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டும்.

''பணம் இருந்தால் தான் அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ளலாம் என்பது சிலருடைய கருத்தாகவுள்ளது. அபிவிருத்தி முயற்சிகளை ஆரம்பிக்க பணம் முக்கியமானதுதான்இருப்பினும்கூட, அடிமட்ட மக்களின் பங்களிப்பு மிக மிக முக்கியமான தொன்ருக நான் கருதுகிறேன்,

''மக்களின் பங்களிப்பு இல்லாத அபிவிருத்தி முயற்சிகள் திட்டங்கள் இன்றும் சிலநாடுகளில் அறிக்கைகளில் மட்டும் இருப்பதை நாம் அறிவோம். எனவே அபிவிருத்தித் திட்டங்களுக்கான பணிகளில் இளைஞர்கள் பங்களிப்பு மிகவும் அவசியமான தொன்ருகும்'' என்று தெரிவித்தார்.

இலங்கை நல்லொழுக்க வாலிபர் இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு லால் தெவப்பத்திரண நன்றியுரை தெரிவித்தார்.

---

### பாராளுமன்றச் செய்திகளுக்கும் தணிக்கை!

(கொழும்பு)

பாராளுமன்றச் செய்திகளை நேற்று மூன்று அங்கத்தவர்கள் கொண்ட குழு தணிக்கை செய்தது.

இக் குழுவில் பிரதம மந்திரி சார்பில் கல்வியமைச்சர் திரு. ரணில் விக்கிரம சிங்காவும். எதிர்க்கட்சியினர் சார்பில் கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகமவும், சபாநாயகர் சார்பில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் திரு. நிஹால் செனிவிரத்னவும் இடம்பெற்றனர்.

(இ-வெ)

---

### யாழ். ஆஸ்பத்திரிக்கு பிரிட்டிஷ் அரசு கைகொடுக்கிறது!

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் மின் சக்தி பாவனைக்கு தட்டுப்பாடு நிலவாமல் இருப்பதற்காக, பிரிட்டிஷ் அரசாங்கம் கைகொடுத்து உதவியுள்ளது.

பிரிட்டனிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ள அதிசக்தி வாய்ந்த 'ஜெனரேட்டர்' ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். ஆஸ்பத்திரி வந்து சேர்ந்துள்ளது.

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவருக்கு யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிகள் விடுத்த வேண்டுகோளின் பேரில் இந்த 'ஜெனரேட்டர்' அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் ஏற்கனவே வைக்கப்பட்டிருக்கும் சிறிய 'ஜெனரேட்டர்' சத்திர சிகிச்சைக் கூடத்துக்கும், அதி தீவிர சிகிச்சை நிலையத்துக்கும் மின்சக்தி கொடுத்துவருகிறது.

யாழ்ப்பாணத்தில் மின்சக்தி தடைப்படும் நேரத்தில் யாழ். ஆஸ்பத்திரியில் மின்வெளிச்சம் இல்லாமலும், நீர் போன்றவை பெறமுடியாமலும் நோயாளர்களும், ஊழியர்களும் பாதிப்படைந்தும்வருவது தெரிந்ததே.

இப்பொழுது வந்து சேர்ந்துள்ள 'ஜெனரேட்ட'ரால் மேற்படி குறைபாடுகள் நிலவமாட்டாதென ஆஸ்பத்திரி வட்டாரங்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன. (மா)

---

### இஸ்ரேலியப் பொலிஸாரால் பிரிட்டிஷ், இத்தாலி இராணுவ அதிகாரிகள் கைது!

ஜெரூசலம் ஜூன் 22

இஸ்ரேலின் தலைநகரான ரெல் அவிவ்வில் பிரிட்டன், இத்தாலி ஆகியவற்றின் தூதரகங்களைச்சேர்ந்த இராணுவ உத்தியோகத்தர்கள் இஸ்ரேலியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவம் கடந்த புதன் கிழமை நிகழ்ந்தது.

பிரிட்டிஷ் தூதரகத்தைச் சேர்ந்த கேர்ணல் பீட்டர் மிச்சேல், இத்தாலியத் தூதரகத்தைச்சேர்ந்த கேர்ணல் ஜயானி பிமரியா, அவரது உதவியாளர் ஆகியோரே இஸ்ரேலியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

ரெல்அவிவ்வில் உள்ள விமானத்தலமொன்றைப்பட மெடுத்த இவர்கள் உளவு வேலைகளில் ஈடுபட்டனர் என்று இஸ்ரேலியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இக்குற்றச்சாட்டுக்களைபிரிட்டனின் வெளிவிவகாரப்பேச்ளார் ஒருவர் மறுத்தார். கேர்ணல் மிச்சேல் இராணுவப் பிரதேசமொன்றில் பிரவேசிக்கவில்லையென்றும் அவர் படங்கள் எதனையும் எடுக்கவில்லையென்றும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன் கேர்ணல் மிச்சேலின் கைது தொடர்பாக பிரிட்டன் இஸ்ரேலிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினர்.

பிரிட்டிஷ் அதிகாரிகள் கொடுத்துள்ள விளக்கத்தில் காரொன்றில் பிரிட்டிஷ், இத்தாலியத்தூதரக இராணுவ அதிகாரிகள் சென்றனரென்றும் அவர்களை இஸ்ரேலியப்பொலிஸார் இரண்டரை மணித்தியாலங்கள் வரை தடுத்துவைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்விளக்கத்தில் மேலும் இந்த தூதரக அதிகாரிகளிடம் ராஜதந்திர பாஸ்போட்டுக்கள் இருந்தபோதிலும் இஸ்ரேலியப் பொலிஸார் அதனை ஏற்க மறுத்துள்ளனர் என்றும் இவர்களை இவர்களது தூதரங்களுடன் தொடர்புகொள்ள விடவில்லையென்றும் கூறப்பட்டது.

இத்தாலியும் தனது தூதரக இராணுவ அதிகாரிகளை இவ்வாறு இஸ்ரேலியப்பொலிஸார் இடையூறு செய்தமைக்கு இஸ்ரேலிய அரசாங்கத்திடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. (கி)

---

### பொறியியலாளருக்கு கௌரவம்

(கொழும்பு)

அலெக்ஸான்டர் கிப்ஸ் அன் பார்ட்னர்ஸ் நிறுவனத்தை சேர்ந்த ஹறி ஹொக்குக்கு மாட்சிமை தங்கிய அரசி 'ஒபிஈ' பட்டம் அளித்துக் கௌரவித்துள்ளார். அவரது பிறந்த நாள் கௌரவப் பட்டியலில் இது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிறுவனத்தினர் விக்டோரியா அணைக்கட்டுத்திட்டத்தின் உசாத்துணைப் பொறியியலாளர்களாவர்.

விக்டோரியாத் திட்டம் 1980ம்ஆண்டு தொடங்கப்பட்ட காலத்திலிருந்து அதன் வேலைப்பகுதிப் பணிப்பாளராகப் பணியாற்றி வந்துள்ள திரு. ஹொக், திட்டத்தின் அணை, சுரங்க வாய்க்கால் முதலிய வேலைகளின் மேற்பார்வைக்கும் நிருமாணத்துக்கும் பொறுப்பாக இருந்துள்ளார்.

திரு ஹொக் பாரிய அணைத் திட்டங்களில் நன்கு அனுபவம் பெற்றவர் உகண்டாவில் உள்ள ஓவென் நீர்வீழ்ச்சிமின் வலுத்திட்டம் ஸிம்பாவேயில் உள்ள கரிபா அணை நீர்மின் வலுத்திட்டம் ஆகியன இத் திட்டங்களில்சிலவாகும்.


45 வருடகால
நம்பிக்கைக்குரிய சேவையுடன்
26%
வட்டி வழங்கும்
இலங்கையில்
மிகப் பழமையானதும்
யாழ்ப்பாணத்தில் தனது
சொந்த நிறுவனத்தில் இருக்கும்
ஒரேயொரு நிதிஸ்தாபனம்
TFC
த பினன்ஸ்
கொம்பனி லிமிட்டட்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், தொலைபேசி: 23680
தலைமை அலுவலகம்
3-ம் மாடி,
சிலிங்கோ ஹவுஸ்,
கொழும்பு - 1.
மற்றும் ஏனைய
14 கிளைகள் உண்டு.



யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி
நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?
உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து
கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான இருவழி பயணச்சீட்டும்,
விசா மற்றும் சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.
Cross Travel
Services (Pte) Ltd.
STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA,
Phone No: 22040, 22065,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மாசுறு செல்வம் சேர்த்தால் மதிகெடும்
நிதிதான் மிஞ்சும்

— இயேசு காவியம்

## நமது நோக்கு

# அமைதிக்குதவுவோம்

பேராதனையிலும் கொழும்பிலும் மரணமான இருமாணவர்களின் குடும்பங்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

இந்தப் பரிதாப மரணங்கள் பாரபட்சமின்றி விசாரிக்கப்பட்டு உண்மையை வெளியிடுவதாக பாதுகாப்பு பிரதி அமைச்சரும் தேசிய பந்தோபஸ்து அமைச்சருமான லலித் அத்துலத்முதலி வாக்குறுதி கொடுத்திருப்பது அமைதிக்கு உதவும் செயலாகும்.

நாட்டு மக்களுக்கு சிங்களத்தில் நிகழ்த்திய வானொலி உரையில் மக்களின் ஒத்துழைப்பை வேண்டி நிற்கிறார் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் அரசியல் வேறுபாடுகளைப் பொருட்படுத்தாது சகல கட்சிகளும் ஒற்றுமைப்பட்டு அமைதியை நிலைநாட்ட கடமைப்பட்டவை.

இக்கடமைக்குப் பல முட்டுக்கட்டைகள் உண்டென்பதை நாம் நன்கறிவோம். எனவே இன்று நாடிருக்கும் நிலையில் தெற்கிலும் அசம்பாவிதமென்றால் அராஜகம் பூரணமடையும் ஆபத்தான நிலை.

இந்தநிலை என்றும் ஏற்படலாமென்ற அச்சம் ஆட்சிக்கிருந்திருக்க வேண்டும்; அச்சமென்னும் போது அவசரப்பட்டு தீங்கைத்தூண்டும் சிந்தனையோசொல்லோ செயலோ - எதிலும் ஈடுபடுவது பல அனர்த்தங்களுக்கு வழிகோலும்.

பொதுவாக நாடெங்கிலும் காணப்படும் அமைதியின்மையே பல்கலைக்கழகங்களில் பிரதிபலிக்கின்றது.

குறிப்பிட்ட வன்செயல்களோ சம்பவங்களோ பற்றிய தகவல்கள் எதனையும் அறிந்து நாம் இவ்வாறு கூறவில்லை.

நாட்டில் ஒரு பகுதியில் குழப்பநிலை நீடித்தால் அது நாடு முழுவதிலும் அமைதியின்மையைத் தொற்ற வைக்கும்; அதுவும் ஒரு சிறு நாடாகிய இலங்கையில்இத்தகைய சம்பவங்கள் நீண்டகாலமாக நடைபெற்று வருகின்றன.

எனவே நாட்டில் அமைதியைப் பாதுகாக்க கோரி நிற்கும் தேசியபந்தோபஸ்து அமைச்சர் கலங்கிய நீரில் எண்ணெய் வார்ப்பது அத்தியாவசியமென்பதைஉணர்வாராக.

இன்றைய குழப்பநிலையை எதிர்க்கட்சியினர் தவறுகப் பயன்படுத்த வேண்டாமென்ற விண்ணப்பம் எச்சரிக்கை போல தோன்றுகிறது; அது அவ்வாறுயின் நோக்கத்துக்கு முரணான செயல்போலிருக்கும்.

பேராதனையிலும்கொழும்பிலும் பல்கலைக்கழகக் குழப்பங்கள் சுமார் பத்து வருடங்களுக்கு மேல் காலத்துக்குக் காலம் தலையெடுத்து வந்திருக்கின்றன.

பல்கலைக்கழகங்களில் குழப்பம், மாணவர் மத்தியில் அமைதியீனம்— இவையெல்லாம் சர்வதேச சம்பவங்கள் என்று தட்டிக்கழிப்பது மடமை; அதே சமயம் இன்றைய நிலைக்கு சிறப்பான அம்சங்கள்எவை என்று இனங் கண்டு அவற்றை அரசியல் ஞானத்துடனும் சமத்துவ புத்தியுடனும் தீர்த்து வைப்பது விவேகம்.

இளைஞர்குழப்பம் அடக்குமுறைகளால் ஒழிந்துவிடாது; தற்காலிகமாக அடங்கினாலும், வலுப்பெற்றும் மீண்டும் தலைகாட்டும் தன்மையுடையது; ஸ்தாபனத்தின் கட்டுப்பாட்டுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் போக்கு இன்றைய இளந்தலைமுறையின் பொதுநோக்காகவுள்ளது.

எனவே அதிக இடமளிக்காமலும், அதே சமயம் சாதுர்யமாகவும் நிலைமையைக் கட்டுப்படுத்த, விடயத்தில் தொடர்புடைய பெற்றோர் ஆசிரியர் பொது மக்கள், இதற்கு மேலாக பல்கலைக்கழக நிர்வாகம் அனுதாப உள்ளத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.

பேராதனையில் நடைபெற்ற முந்திய குழப்பம் பற்றிய அறிக்கை வெளியிடப்படாதது அரசின் தயக்கத்தை நிரூபிக்கிறது.

குறைகளை ஏற்று, நல்ல ஆலோசனைகளைச் செயற்படுத்த அரசாங்கம் முன்வந்திருந்தால் இன்றைய அவல நிலை தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

மாணவ சமூகம் ஒற்றுமைப்பட்ட ஒரே சமூகம்: இனரீதியில் பாகுபடுத்தி பிரச்னைகளை அணுகுதல் நிலைமையை மோசப்படுத்தும்.

தமிழர் பிரச்னையென்ற தேசியப் பிரச்னை நிலவும் வரைக்கும்நாட்டின்அமைதி முயற்கொம்பு.

# ‘இலங்கை தமிழர் பிரச்னையில் இந்திராவுக்கும் பெரும் அக்கறை!’

## தமிழ்நாடு செல்லுமுன் கூட்டணித்தலைவர் கருத்து

(கரவெட்டி நிருபர் ம.வரதராஜன்)

“இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் பிரச்னையால் இந்தியா இனி இலங்கைப்பிரச்னையில் அக்கறை எடுக்காதென சிலர் எண்ணியிருந்தனர். ஆனால் மாநிலத்தின் பிரச்னை உச்சக் கட்டத்தில் இருந்த வேளையிலும் ஜனதிபதி ஜெயவர்த்தனவை அழைத்ததிலிருந்து பாரதப் பிரதமர் திருமதி காந்தியும் இந்திய அரசும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னை மீது வைத்துள்ள அக்கறை தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு மு. சிவசிதம்பரம் தமிழ்நாடு செல்லு முன்னர் ‘ஈழநாடு’வுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சென்ற ஆண்டு ஜனதிபதி அவர்களால் புதுடில்லியில் வைத்துக் கூறியதை, சர்வ கட்சி மாநாட்டில் கை கழுவி விட்ட அனுபவத்தின் பின்னணியோடு தான் இம்முறை திருமதி காந்தி அவருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்பதை தாம் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

“இம்முறை நடைபெறவிருக்கும் ஜே.ஆர் இந்திரா சந்திப்பு தமிழ் மக்களின் பிரச்னையில் ஒரு முக்கிய நிகழ்ச்சி என்ற படியால் நாங்களும் இந்தியாவில் இருப்பது மிக அவசியம் எனக் கருதியே நாங்கள் சென்னையில் இருக்க உள்ளோம்!

தேவை ஏற்படும் பட்சத்தில் டில்லி செல்லும் அவசியமும் ஏற்படலாம்! என்றும் அவர் சொன்னர்.

## விவசாயிகளுக்கு விதை நெல்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு இவ் வருட காலபோக நெல் செய்கைக்கு தேவையான விதை நெல்லை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மானிப்பாய் பகுதி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. எஸ். சிவகுமார் மேற்கொண்டு வருகின்றார். இந்த விதை நெல்லை பெற விரும்பும் விவசாயிகள் தமது விவசாய அடையாள அட்டைகளை பெற்றுக் கொற்றுக் கொள்ள வேண்டும் என்றும், காலபோக நெற் செய்கைக்கான விதை நெல்லைப் பெறுவதற்கு இவர்கள் தம்மிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் திரு. சிவகுமார்தெரிவித்தார்.

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ன்னுகம் மயிலணிக் கந்தசாமி கோயில் மகோற்சவம் வரும் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அடுத்த மாதம் 4 ம் திகதி தேர்த் திருவிழாவும் 5 ம் திகதி தீர்த்தமும் நடைபெற்று 6 ம் திகதி வைரவர் பொங்கலுடன் மகோற்சவம் முடிவடையும்.

## வண. சிங்கராயர் தாயாரைப்பார்க்க சென்றதில் அரசுக்கு ரூ.36ஆயிரம்செலவு

(யாழ்ப்பாணம்)

சிறையில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரான வண பிதா. சிங்கராயர் கடந்த ஆண்டு நோய்வாய்ப்பட்ட அவரது தாயைச் சென்று பார்வையிட அனுமதிக்கப்பட்டார்.

“விசேட விமானமொன்றில் அவர் யாழ்ப்பாணத்திலுள்ள அவரது தாயிடம் கொண்டு செல்லப்பட்டார். இதனல் அரசாங்கத்துக்கு ரூ. 36 ஆயிரம் செலவு ஏற்பட்டது. என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

“வணசிங்கராயர் பயங்கரவாதச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட ஒரு சந்தேகநபர் ஆனல் அவருக்கு இச் சலுகை அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் வழங்கப்பட்டது. உலகில் வேறெங்காவது இப்படிப் பட்ட சந்தேகநபர்களுக்கு இது போன்ற சலுகை வழங்கப்படுகிறதா? என்றும் அப்பேச்சாளர் மேலும் கேட்டார்.

“கடந்த நவம்பர் முதலாந் திகதி கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு விசேட விமானமொன்று அனுப்பப்பட்டது. பின்னர் அவ்விமானம் வண சிங்கராயரை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் சென்றது. மீண்டும் அவ்விமானம் அங்கிருந்து மட்டக்களப்புக்கு வந்தது” என்று தெரிவித்து இந்நீண்ட பயணத்தினல் அரசுக்கு 36 ஆயிரம் செலவு ஏற்பட்டது. என அந்தபேச்சாளர் கூறினர். (கி)

## பொதுக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் வரும் 27 ம் திகதி நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர், திரு. வே. நாகராசா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் வசதிக் கட்டண மாற்றம் பற்றிய தீர்மானம் உட்பட மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மாணவர் பிரச்னையைத் தீர்க்க யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் உயர்கல்வி அமைச்சுடன் தொடர்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக யாழ். பல்கலைக்கழக நிர்வாகம், உயர்கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு எடுத்துக் கூறியது. அத்தோடு தகுந்த முடிவு தெரிவிக்குமாறும் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சகல பீடமாணவர்களும் நான்கு கோரிக்கைகளையும் முன்வைத்து கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழக உபவேந்தரையும், பதிவாளரையும் மாணவர்கள் பிரதி நிதிகள் சந்தித்து உரையாடியதுடன் தங்கள் கோரிக்கைகளுக்கு தகுந்த தீர்வுகாணுமாறும் கேட்டுக் கொண்டனர்.

உயர்கல்வி அமைச்சின் முடிவை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள், யாழ். பல்கலைக்கழக வளவில் கூடி தங்கள் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

# ‘பிரதமரால் வரமுடியாது- லலித்தான் ஜனதிபதி!’

(இ. கந்தசாமி)

“பிரதமர் என்னதான் முயற்சித்தாலும், அவரால் ஜனதிபதியாக வரமுடியாது லலித்துக்குத்தான் ஜனதிபதி பதவி கிடைக்கும். அவர் சதி செய்வதிலும் அர்த்தமில்லை!” என்று எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கூறினர்.

அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணை விவாதிக்கப்பட்டபோது, அனுரா பேசிக்கொண்டிருந்தார். அப்போது இதனைக் குறிப்பிட்டார்.

இக்கட்டத்தில் பிரதமர் குறுக்கிட்டு, “அனுராவின் ‘அத’ என்ற பத்திரிகையில், என்னல் பிரதமராக வரமுடியாது என்றுஎழுதினர்கள். என்ன நடந்தது? இப்போது அனுரா கூறுவது என்னை ஆசீர்வதிப்பது போல் இருக்கிறது” என்று கூறினர்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நிறுவியவர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் நாளை காலை நடைபெறவுள்ளது. யாழ், மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பணிப்பாளர் திரு. இ. முருகையன் பிரதமவிருந்தினராக கலந்து கொள்கிறார். யாழ். பல்கலைக் கழக நூலகர் திரு. சி. முருகவேள் நிறுவியவர் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். திருமதி முருகையன் பரிசில்ள் வழங்குவர்.

## நடவடிக்கை எடுக்கவும்

யாழ். நாவாந்துறை சூரிய வெளி குடியேற்றத் திட்டத்தில் சுமார் 60 குடியிருப்பாளர்கள் வாழ்கிறார்கள். இத்தனை குடும்பங்களுக்கும் ஒரேயொரு குடிநீர்க் குழாய் மட்டுமே உள்ளது. சுற்றுடலிலுள்ள கிணறுகள் யாவும் உப்புத்தன்மை வாய்ந்தவை. முழுக்க முழுக்க தொழிலாளர் குடும்பங்களே இங்கு வாழ்கிறார்கள். ஒரேயொரு குடிநீர் குழாய் வசதி காரணமாக தினமும் காலையும் மாலையும் குழாயடிச் சண்டைகள் நடைபெறுவதால் எந்த நாளும் அங்கு சண்டையும் சச்சரவுமாக உள்ளன. இக் குடும்பங்களின் நலன் கருதி

## மக்கள் கருத்து

பிறிதொரு குழாய்நீர் வசதி செய்துதர வேண்டுமென பல முறை யாழ். மாநகரசபை நிர்வாகத்திடம் வேண்டியும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை.



இப்பகுதி கடற்கரையில் குப்பை கூழங்களை யாழ். யாழ். மாநகரசபை லொறிகள் தினமும் கொட்டுவதால்அவை அப்பகுதி எங்கும் துர்நாற்றத்தைக் கொடுப்பதுடன் காற்றில் பறந்து வீதிகளிலும் பரவியுள்ளன. ஏற்கனவே சுகாதாரக் குறைவான இப்பகுதியில் மேலும் சீர்கேட்டை உண்டாக்குகிறார்கள்,

தயவு செய்து யாழ். மாநகர சபையினர் இப்பகுதி ஏழைக் தொழிலாளர் குடும்பங்களின் நலன்கருதி மேற்படி குறைகளை நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்,

—மார்க் பகவதசிங்
நாவாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவம் பெறும் கலைஞர்கள்

அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையம் தனது 38-வது ஆண்டுவிழாவினை இன்று முதல் 25-ம் திகதி முடிய கொண்டாடவிருக்கின்றது. இவ்விழாவில் கௌரவிக்கப்பட விருக்கும் மூன்று முக்கிய கலைஞர்களே இவர்கள். 1. வே. ஐயாத்துரை, 2. வி. கே. இரத்தினம், 3. கு. கந்தையா இவர்கள் பற்றிய விபரம் நேற்று வெளிவந்தது.

## "பெட்டியைத் திறந்தபோது

# நகைகளுக்குப் பதிலாக இரும்புத் துண்டுகள்"

## ஏமாற்று மோசடிவழக்கில் சாட்சியம்

(மாவிட்டபுரம்)

"எனது மகனின் நோயை குணப்படுத்துவதற்காக என்னிடமிருந்த நகைகள் முழுவதையும் பெட்டியில் வைத்துப் பூட்டி நோய் குணமாகும் வரை அவற்றை எடுக்கக்கூடாதென எதிரிகள் கூறியதால் நான் அதைநம்பி ஒன்றரை வருடத்திற்திகு மேலாகப் பெட்டியை திறந்து நகைகளை எடுக்க முயற்சிக்கவில்லை. ஆனால் எதிரிகள் கூறியபடி மகனின்நோய் குணமடையாமையால் எதிரிகள் மீது சந்தேகம் கொண்டு பொலிசில் புகார் செய்தேன். பொலிசார் வந்து பெட்டியைத் திறந்துபார்த்த சமயம் அந்தப்பெட்டிக்குள் நகைகளுக்குப்பதிலாக இரும்புத்துண்டுகளே காணப்பட்டது'.

இவ்வாறு நகைமோசடி வழக்கொன்றில் சாட்சியமளித்த வழக்காளியானபெரியவிளான் இளவாலையைச் சேர்ந்த மாதன் தர்மலிங்கம் கூறினார்.

பெரியவிளான் இளவாலையைச்சேர்ந்த மாதன் தர்மலிங்கத்திற்குச் சொந்தமான 80 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகளை ஏமாற்றி மோசடி செய்ததாக சில்லாலையைச்சேர்ந்த பேதுறு செபமாலைமுத்து, அவர் மனைவி கமலா இராஜேஸ்வரி ஆகியோர் மீதும், வவனியா தோணிக்கல் வாசியான டேவிட் லெபோன்சியஸ் என்பவர்மீதும் இவ்வழக்கில் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி சீ. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் வழக்காளியான மாதன் தர்மலிங்கம் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:-

### மருமகனும் மகளும் எதிரிகள்

"முதலாம்எதிரி எனது மருமகனுவார். இரண்டாம் எதிரி எனது மகளாவார். முதலாம் எதிரி இரண்டாம் எதிரியை திருமணம் செய்திருக்கிறார். மூன்றும் எதிரியை இந்தசம்பவத்திற்கு பின்பே எனக்கு யாரெனத் தெரியவந்தது. எனக்கு மனோகரன் என்று மகன் ஒருவர் இருக்கிறார். அவருக்கு ஒரு கையும், காலும் வழங்காது. வாய்பேச மாட்டார்.

"79ம் ஆண்டு 1ம், 2ம் எதிரிகள் எனது வீட்டுக்குவந்த சமயம் எனது மகன் பற்றிக் கதைத்தோம். எனது மகனை சுகப்படுத்தி தருவருவதாக ம்1 2ம் எதிரிகள் கூறினர். ஒரு வைத்தியர் இருப்பதாகவும் அவர் இங்குவரும்போது எங்கள் வீட்டுக்கு கூட்டிவருவதாகவும் அவர்கள் கூறினர். 79ம் ஆண்டு கார்த்திகை 16ம் திகதி இரவு 12 மணியளவில் 1ம், 2ம் எதிரிகள் ஒரு வைத்தியரை எனது வீட்டுகசு கூட்டிவந்தனர். 3ம் எதிரிதான் அந்த வைத்தியர் அவர் எனது சுகவீனமுற்ற மகனை பார்த்துவிட்டு அவரை குணப்படுத்தலாமெனக் கூறினர். அன்று சிறிதுநேரம் செபம் செய்துவிட்டு வைத்தியர் என்று கூறிய 3ம் எதிரி சென்றுவிட்டார்.

"பின்னர் அதேமாதம் 30ம் திகதி இரவு 3ம் எதிரியும் அவருடன் 1ம், 2ம் எதிரிகளும் எனது வீட்டுக்கு வந்திருந்தனர். 3ம் எதிரி எனது வீட்டிலுள்ளசாமி அறைச்குச்சென்று செபித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தால் என்னையும் 1ம், 2ம் எதிரிகளையும் அவர் கூப்பிட்டார். நாங்கள் அங்கு சென்றோம். 'பிள்ளைக்கு நல்ல சுகம்வரும். கடவுளில் நம்பிக்கை வைத்துக்கொண்டு நகைகள் எதுவும் அணியாமல் இருக்கவேண்டும். நகைகள்எல்லாவற்றையும் ஒரு பெட்டியில் போட்டு கவனமாக ஒருஇடத்தில் வைக்கவும். பிள்ளைக்கு சுகம் வந்தபின் நான்வந்து சொல்கிறேன். அதன்பின் நகைகளை எடுத்து அணியலாம்'' என்று 3ம் எதிரி கூறினார். இதை நான் நம்பினேன். சாமி அறைக்குள் 'சூட்கேஸ்' பெட்டி ஒன்றினுள் வெள்ளை லேஞ்சியில் கட்டி நகைகள் வைக்கப்பட்டன. எக்காரணம் கொண்டும் நகைகளை எடுக்கக் கூடாது. எடுத்தால் பிள்ளைக்கு சுகம்வராதுஎன 3ம் எதிரி கூறினார். பெட்டியை திறக்க மாட்டேன் என சத்தியம் செய்யுமாறும் 3ம் எதிரி கேட்டார். நான் சத்தியம் செய்தேன் பின்னர் 3 எதிரிகளும் சென்றுவிட்டனர். ஒன்றரைவருடங்களாக நான்பெட்டியை திறக்கமுயற்சிக்கவில்லை. அவ்வாறு திறக்கவும் எனக்கு முடியாதிருந்தது. 1ம் எதிரி அதனைப் பூட்டி திறப்பை எடுத்துச்சென்றிருந்தார்.

### மகனின் நோயில் மாற்றமில்லை

தொடர்ந்தும் எனது மகனின்நோயில் மாற்றம் எதுவும் ஏற்படாமையால், 1ம் எதிரியிடம் இதுபற்றிக்கேட்டேன். அவர் 3ம் எதிரியிடம் கேட்டே எதனையும்செய்யவேண்டும்என்றார். 27-6-81ல் 1ம் எதிரிவந்து 3ம் எதிரி தமது வீட்டில் வந்திருப்பதாகவும் பிசகுகளை தீர்க்கவருமாறும் அழைத்தார், நான்சென்றபோது இன்னும் ஒருமாதத்தில் பிள்ளைக்கு சுகம் வந்துவிடும். குறிக்கப்பட்ட தவணையை மீறி நகைகளை எடுத்தால் பிள்ளைக்கு ஆபத்துவரும் என்று 3ம் எதிரி சொன்னார். அவர்கள் என்னை ஏமாற்றுகிறார்கள் என்பதை உணர்ந்து நான் பொலிசாரிடம் சென்று முறையிட்டேன். பொலிசார் 1ம் எதிரியிடம் சென்ற சமயம் அவ இருக்கவில்லை, 2ம் எதிரியைக் கூட்டிவந்து பெட்டியை திறந்தனர். நகை வைக்கப்பட்டிருந்த பெட்டியில் இரும்புத் துண்டுகளேஇருந்தன'மேற்படி 3 எதிரிகளும் என்னை ஏமாற்றி 80ஆயிரம் ரூபா பெறுமதியான எனது நகைகளை மோசடி செய்துவிட்டார்கள் என்றுகூறுகிறேன்'' என்றார்.

மேல்விசாரணை ஜூலை 23ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்காளி தரப்பில் காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் கே. துரைசிங்கத்துடன் சட்டத்தரணிகள் திரு. சபாநாதன் திரு. ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆகியோர் ஆஜராகினார்கள்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி திரு. பாக்கியநாதனின் உதவியுடன் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

### முள்ளியான் முகியிதீன் பள்ளிவாசல்

# தென்னைச் செய்கையாளர் சங்கத்துக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

முள்ளியான்முகியிதீன்பள்ளிவாசல் தென்னைச் செய்கையாளர் சங்கத்தின் சேவைக்கு யாழ் முஸ்லிம் பெரியார் அல்ஹாத் என். எம். மீரான் முஹிதீன் ஆலிம் பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன் வசதியற்ற யாழ் முஸ்லிம் குடும்பங்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கி அரசின் உவிவியுடன் வீடமைத்துக் கொடுக்கும் திட்டத்திற்கு பூரண ஆதரவும் தெரிவித்துள்ளார்.

முள்ளியவளையிலுள்ள முள்ளியான் பகுதியில் தான் வாங்கிய 180 ஏக்கர் நிலத்தை வசதி

(8ம் பக்கம் பார்க்க)

## இன்றைய வானொலியில்

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை -பிரம்மா சுப்ரபாதம்
5-47 பக்திப்பாடல்
6-00 சைவநற்சிந்தனை
6-05 கத்தோலிக்க நற்சிந்தனை
6-10 பாமாலை
6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்கள்
7-00 இங்கிலிஷ் போர் யூ -கல்விச்சேவை நிகழ்ச்சி
7-30 மாகாணச் செய்திகள்
7-35 குரல் வகை
8-15 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8-45 தாளவாத்தியக்கச்சேரி -என். சோமஸ்கந்தசர்மா
9-15 தமிழ் மூலம் சிங்களம் -என். டி. பீரிஸ்
9-30 நாட்டுப்பாடல் -எஸ். கணபதிப்பிள்ளை ஞானகுமாரி
9-45 ராகஆலாபனையும், விளக்கமும்
10-00 சங்கமம்-அறிவிப்பாளர் நிகழ்ச்சி
10-15 கதைப்பாட்டு 'கந்தப்பனின் கழுதை' -பாலாம்பிகைநடராசா
10-30 அறிவுச்சுழல் -பொன். ராஜகோபால்
11-00 விஞ்ஞான தீபம்
11-30 சிறுகதை'உறங்கியஉண்மைகள் பேசிய போது' -எஸ். ஸ்ரீரஞ்சனி
11-45 மாணிக்க ஆரம்
11-58 பகல் ஒலிபரப்பு முடிவு.
மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-20 இப்தார் நிகழ்ச்சி
6-35 ஞானக்கோவை
7-05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
இரவு
8-00 உலகச் செய்திகள்
8-10 நாடகமேடைப்பாடல்கள்
8-40 மெல்லிசைத் தேர்வு
8-45 கண்டதும் கேட்டதும் (செய்திச்சுருள்)
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள்
9-30 மெல்லிசைப்பாடல்
9-45 நாடகம் 'சுருதி கலைந்த ராகம்' -சதாயினி நாகலிங்கம்
10-30 ஒலிபரப்பு முடிவு

குரோஸ் ட்ரவல் சேவிசஸ் பிறைவேற் லிமிட்டெட்
(CROSS TRAVEL SERVICES (Pte) LTD.)
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் புதிய முயற்சி:-
குரோஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)
FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.
INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.
குரோஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை :
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.
உலகின் எப்பாகத்திற்கும குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்
CTS
Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD, MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065 Telex No: 22207 (C, T, S,)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—9 (23-6-1984)
வாரம்—சனி
திதி—நவமி காலை 7-14ன் மேல் தசமி
நட்சத்திரம்— ரேவதி பிற்பகல் 2-57ன் மேல் அச்சுவினி

மேடம்: தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம் பண்படாத விவாதங்களால் வீண்பெயர் கேட்க நேரிடும் வெளியிடச் செய்தியும் கிடைக்கும்.

இடபம்: கலைஞர்கள் போற்றப்படுவார்கள் வெளியூர்களிலிருந்து அழைப்புக் கிடைக்கலாம் பிதாவழித் தனவரவிற்கும் இடமுண்டு தரும காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

மிதுனம்: நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கலாம் வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு சிலர் புதிய துறைகளில் முதலீடு செய்வதற்கு விரும்புவார்கள் சிறப்பானதினம்,

கடகம்: புதிய வழிகள் மூலம் பொருள் வரவிற்கு இடமுண்டு சிலருக்கு பதவி உயர்வும் கிடைக்கலாம் குடும்பத்தில் இனிமை தவழும் பிள்ளையொன்றின் கல்வியில் அதிக கவனம் செலுத்தப்படும்.

சிங்கம்: பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம் வெளியிடத் தொடர்புகள்பெருகும் கருத்து வேற்றுமைகள் மறைந்து நல்ல முடிவு ஏற்படும் கல்வித்துறையிலும் முன்னேற்றமுண்டு.

கன்னி: கண்துடைப்பு வேலை நடைபெறும் வீட்டில் சிறிய பூசல்கள் தலைதூக்கலாம் எந்த விடயத்திலும் நன்ருக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும் ஆணவத்தைக் குறைக்கவும்.

துலாம்: முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கலாம் முதியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும் கற்றதால் பயனும் உண்டு களஸ்திர வழியாலும் மகிழ்ச்சி ஏற்படும் இன்று பொன்னன தினம்.

விருச்சிகம்: துள்ளி வரும் வெள்ளிப்பணம் உங்கள்வாழ்க்கையை சோபிதமடையச்செய்யும் எதிர்பாராத விருந்தினர் வருகைக்கும் இடமுண்டு ஒரு பெண்ணின் மூலம் அதிக ஆதரவு கிடைக்கலாம்,

தனுசு: பொறியியலாளர்களுக்கு இன்று பொன்னன தினம்பூமிவிவகாரத்தில் இன்று நல்ல முடிவு ஏற்படும் செலவுக்கு வேண்டிய பணமும் கிடைக்கும் சிலருக்கு வாகன சுகமும் உண்டு.

மகரம்: அதிர்ஷ்டகரமான தினம் சிலருக்கு திரவியலாபத்திற்கும் இடமுண்டு மனை வாழ்வில் மகிழ்ச்சி தென்படும் வீட்டில் சுபகாரியமொன்று இடம் பெறலாம் பணம்பத்தும் செய்யும்.

கும்பம்: சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும் செய்தொழிலால் நஷ்டமுண்டு புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று சிலருக்கு நூதன ரோகம்தென்படலாம் சுகாதாரம்வேண்டும்.

மீனம்: எதிர்பாராத சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுவீர்கள் காத்திருந்த கண்களுக்கு வியப்பூட்டும் விருந்தொன்றும் கிடைக்கும் மகிழ்ச்சியான தினம்,

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## யாருடையது?

கொழும்புத்துறையைச் சேர்ந்த கே. பாலசுப்பிரமணியம் என்பவர் திரு, மூத்துத்தம்பி ராஜகோபாலபிள்ளை என்பவரின் சாரதிலைசென்ஸ், காப்புறுதி, ராக்ஸ் முதலியவைகளையும், திரு. செ, பிரான்சிஸ் என்பவர் அல்லைப்பிட்டி -ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் செல்லையா என்பவரின் அடையாள அட்டையையும், திரு. இ. சந்திரன் என்பவர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகக் கலைப்பீட மாணவனுகிய செல்வன் வடிவேல் பாஸ்கரன் என்பவரின் அடையாள அட்டையும் கண்டு எடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்,

## கலைகளின் வித்தகராய் திகழ்ந்தவர்



''செந்தண்மை பூண்டொழுகலான்'' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்குச் சிறந்த ஒரு எடுத்துக் காட்டாகப் பெரும்புகழுடன் வாழ்ந்த எங்கள் குருக்கள் ஐயா சிவஸ்ரீ கு. இராமநாதக் குருக்கள் அமரத்துவம் அடைந்து ஒருஆண்டு ஆகிறது. இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனுலும் ஐயா அவர்கள் மீது அளவில்லாத அன்பும் பெருமதிப்பும் பக்தியும் கொண்ட ஆயிரம் ஆயிரம் உள்ளங்களில் அவரைப்பற்றிய நினைவுகள் நின்றும் நீங்காது நிலைத்து எற்கும் அவர்கள் இறவாத புகழுடம்பைப் பெற்றுவிட்டார்.

தன்னிகரற்ற பல கலைஞர்களை. கவிஞர்களை முத்தமிழ் வித்தகர்களை, நாவலர்களை, நல்லறிஞர்களை, ஞானிகளை உலகுக்குத் தந்து பெருமை கொண்ட எமது இணுவையம்பதி, சிறந்த தவசிரேஷ்டரான குருக்கள் அவர்களை உலகுக்குத் தந்ததன் மூலம் மேலும் பெருமையடைகிறது. அவர்களின் பெருமையும் புகழும் அவர் பிறந்த மண்ணில் மட்டுமல்லாமல் நாடெங்கிலும் பரந்து கிடக்கின்றது. நாடெங்கிலும் ஆங்காங்கே பல ஆலயங்களில் வியக்கத்தக்க முறையிலே பல குடமுழுக்குப் பெருவிழாக்களையெல்லாம் பிரதம குருவாக அமைந்து சிறப்புற நிகழ்த்தி அந்தணர் குலத்திற்குக் கிடைத்த அரும் செல்வமாக விளங்கியவர். சிவாகம கிரியா சிரோரத்தினம், சிவாகம ஞானசாகரம் போன்ற பல சிறப்புப்பட்டங்களையெல்லாம் பெற்றுப் பெருமை கொண்டவர். ஆஜானுபாகுவானதோற்றம். எதையும் கூர்ந்து ஆராயும் கண்கள். அந்தக்கண்களிலே கருணைஒளி, கல்வியால், தவத்தால், புகழால், பெருமையால் மட்டுமல்ல உருவத்திலே கூட உயர்ந்தவர்கள் அவரைப் பார்க்கும்போது நெடுமால் என்று வருணிக்கப்படும் காத்தல் கடவுளான மகாவிஷ்ணுவின் அவதாரமோ இவர் என்று எண்ணத்தோன்றும்.

மகான்கள் மறையும்போது உலகம் உள்ளளவும் தம்மை நினைக்கும்படி எத்தனையோ நல்ல செயல்களையெல்லாம் செய்துவிட்டு புனருத்தாரணம் செய்யப்பட்ட மஞ்சத்தில் இணுவை முருகன் அமர்ந்து சிங்காரமாக கம்பீரமாக வீதியுலாவந்த அதியற்புதக் காட்சியையும் கண்டுகழித்துவிட்டு இறைவனின் அழைப்பை ஏற்றுச் சென்றுவிட்டார். தெய்வமாகிவிட்ட எங்கள் ஐயாஅவர்களின் ஆசீர்வாதம் என்றும் அவரது அன்பர்களுக்குக் கிடைப்பதாகுக.

இணுவை
**ந. சிதம்பரேஸ்வரன்**


# இல்லத்தரசிகளே!
# இன்னும் நீங்கள் பாவிக்கத் தொடங்கவில்லையா?







# ரஜசோயா

இன்னும் நீங்கள் பாவிக்கத் தொடங்கவில்லையா ?
முழுக்குடும்பத்துக் குமான புரதச்சத்து நிறைந்த உணவு,
ரஜசோயா வாழ்க்கைச் செலவு மின்னல் வேகத்தில்
உயர்ந்து கொண்டுப் போகும் இவ்வேளையில்
வீட்டுச் செலவை குறைக்க உதவுகின்றது.
ரஜசோயா பலகாரங்கள் தயாரிப்பதற்கும்,
ரொட்டி அப்பம், இடியப்பம்,
பிட்டு முதலியன தயாரிப்பதற்கும் இன்றியமையாதது.
ரஜசோயா புரதச் சத்து நிறைந்தது.
போஷாக்கு அடங்கியது.
காலஸ்டரோல் எனும் கொழுப்புச்சத்து
அறவே இல்லாதது.
ரஜசோயா மக்களின் அபிமானம் பெற்ற உணவு.
இன்றே உங்கள் சில்லறை வியாபாரியிடம் ஒரு பக்கட்
வாங்கிக் கொள்ளுங்கள்.
முதன் முறையாக.
நவீனமயமான தொழிற்சாலையில் சுகாதார
முறைப்படி தயாரிக்கப்பட்டது.

**ரஜறட்ட ஃபுட் கிறெயின்**
**புறேசெசிங் கம்பனி லிமிட்டெட்**
29, பிறே புறூக் வீதி, கொழும்பு - 2.
தொலைபேசி: 27961-7
ரஜசோயா எனக் கேட்டு வாங்குங்கள்.
தரங்குறைந்த போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

ZENITH


## ரூபவாஹினியில் இன்று!

மாலை
5-30 'பிஜன்ஸ்றீட்' ஆங்கிலம்)
5-45 'பிளேஹவுஸ்' (ஆங்கிலம்)
6-10 விவரணச் சித்திரம்
6-35 எதிர்கால நிகழ்ச்சிகள்
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இசைநிகழ்ச்சி(சிங்களம்)
7-45 'டாட்ஸ் ஆர்மி' நகைச்சுவை சித்திரம் (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 நாடகம் (சிங்களம்)
9-05 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'ஸ்டார்ஸ்கிஅன்ட் ஹச்' (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 ஸ்டார்ஸ்கி தொடர்ச்சி
10-55 நிகழ்ச்சிகள் முடிவு.

## வவனியாவில் நீர் விநியோகம்

(வவனியா)

பத்து இலட்சம் ரூபாய் செலவில் வவனியா நகர எல்லைக்குள் பாரிய குடிநீர் விநியோகம் குழாய் மூலம் நடைபெறுகின்றது. இதற்கு முதற்படியாக விசேடமாக குடிநீரை பெறுவதற்கென தோண்டப்பட்ட கிணற்றிலிருந்து பரீட்சாத்தமாக ஒரு மணித்தியாலத்திற்கு எவ்வளவு நீரைப் பெறலாம் என்று கணக்கிடப்படும் நோக்குடன் இயந்திரம் மூலம் நீர் இறைத்து கணக்கிடப்படுகின்றது.

இத்திட்டத்தினை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் அமுல் செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 2-30, 5-30
**மீண்டும் கோகிலா**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ் - சரிதா
**மௌன கீதங்கள்**

**மனோகரா** (யாழ் நகர்)
இதுவேகடைசிச் சந்தர்ப்பம்.
தினசரி 10-30, 2-15 4-45, 7-00
THE POSTMAN ALWAYS RINGS TWICE
கலர் (கண்டிப்பாகவயது வந்தவர்களுக்கு)

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
5-வது வெற்றி வாரம்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)
விரைவில்
புரூஸ்லியின்
BIG BOSS

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர்
**வண்டிக்காரன் மகன்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2.30, 6.30
கமலஹாசன் - மாதவி
**ராஜபார்வை**
[புதிய பிரதி] கலர்

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 1-30, 3-30 5-30, 7-15
Top entertainment of the Day ..
New way of Action Karate you have ever sean before
HENRY SANADA-SUE SHIOMI
**SHOGUN'S NINJA**
(Color)
இதுவரைவந்தகராட்டி, குங்பூ படங்களுக்கு மேலான இன்றைய உலகின் முதன்மையான 'NINJITSU' சண்டைக் கலையைக் கொண்ட இன்றைய இளைஞர்கள் பார்க்கவேண்டிய முதல்தர யப்பானியப் படம். குறிப்பிட்ட சில தினங்களுக்குமட்டும்,

**றீகல்** (யாழ். நகர்)
22nd to 1st
10-30, 2-15, 4-30, 6-30
John Hurt......
**NIGHT CROSSING**
Color
கிழக்கு ஜெர்மனியை சேர்ந்த இரண்டு குடும்பங்கள் சந்தர்ப்பத்தை சாதகமாக்கி, பொலிசாரிடமிருந்து தப்பி வீட்டில் செய்த பலூன் மூலமாக 386 மைல் நீளமான முட்கம்பி வேலியை தாண்டி சுதந்திரமாகின்ற மயிர்க் கூச்செறியும்உண்மைக்கதை
Dont Miss This Film


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

பண்டத்தரிப்பு என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை துரைராஜா என்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல: ரி/ 200

துரைராஜா கைம்பெண் இரத்தினபூபதி தபாற்கந்தோர் வீதி, பண்டத்தரிப்பு.

எதிராக மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு ஆடி மாதம் 11ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக் கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984ம் ஆண்டு சித்திரை மாதம் 25ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆழ்வார். சிவபாதசுந்தரம்
பதிவாளர்

சோமசுந்தரம். தேவராஜா
சட்டத்தரணி 409


**சாந்தி** (யாழ். நகர்
10-30, 2-30, 4-45, 7-00
Tony Curtis, Elizabeth Taylor
THE MIRROR CRACK'D
Suspense, Murder, Color

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சுதாகர், ராதிகா
**கிழக்கேபோகும் ரயில்**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர் - விஜயா
**ஜானகி சபதம்**
(புதிய பிரதி)


## கிரிக்கெட்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் பொதுவைத்தியசாலை விளையாட்டுக்கழகத்திற்கும், வேல்ரின் விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நாளை ஞாயிற்றுக் கிழமை மென் பந்தாட்டக் கிரிக்கட் போட்டி நடைபெறவுள்ளது.

சென். பற்றிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் இக் கிரிக்கட் போட்டிக்கு யாழ். ஆஸ்பத்திரி மேற்பார்வையாளர் தலைவர் திரு. எஸ். சிவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்கள் வழங்குவார் (மா)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

குரும்பசிட்டியைச் சேர்ந்த கயிலாயபிள்ளை இரவீந்திரன் பெண் ரதிவதனை என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

இறந்துவிட்டார்
கந்தையா அருளம்பலம்
கைம்பெண் இரத்தினம்
குரும்பசிட்டி

நிருவாகி

அருளம்பலம் மணிதாசன்
குரும்பசிட்டி

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல: 167

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கில் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி கந்தையா அருளம்பலம் கைம்பெண் இரத்தினம் நிருவாகியாக நியமிக்கப்பட்டு அவர் இப்பொழுது காலஞ்சென்றுவிட்ட படியாலும் மேற்படி மரணமெய்தியவரின் சொத்துக்களை தொடர்ந்து நிருவகிப்பதற்காக மேற்படி மனுதார் மனுச் செய்திருக்கின்றபடியாலும் அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இதனல் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு ஆடி மாதம் 18ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகா தென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ரூர்.

1984ம் ஆண்டு சித்திரை மாதம் 30ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆழ்வார். சிவபாதசுந்தரம்
பதிவாளர்
358

# வயோதிபர் இல்லத்தில் வாழ்ந்த மூதாட்டியின் சடலத்தை பெற கணவனும் மகனும் போட்டி!

(யாழ்ப்பாணம்)

வயோதிபர் இல்லத்தில் மரணமான மூதாட்டி ஒருவரின் சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு கணவனும் மகனும் தனித்தனியே கோரினர்கள். கடைசியில் மகன் விட்டுக்கொடுக்க சடலம் கணவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

கொழும்பைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பிரகாசியன் (60வயது) மரண விசாரணையின்போதே மேற்கண்ட கோரிக்கைவிடுக்கப்பட்டது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. க. கேசவன் மரண விசாரணை நடத்தினர்.

இறந்தவர் 82ம் ஆண்டு முதல் பாரிசவாதத்தினல் பாதிக்கப்பட்டு கொழும்பில் சிகிச்சை பெற்றுவந்தாரென்றும் பின் 83 ஜூலைக் கலவரத்தின்பின் அவரை அவரதுமகன்

(8ம் பக்கம் பார்க்க)


## பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு செய்முறை போதனமுறை உட்பட எமது அடுத்த வகுப்புகள்
எதிர் வரும் ஞாயிறு 1-07-1984ல் ஆரம்பமாகின்றன,

★ மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)
★ கொம்பியூட்டர் புரோகிரமிங் (COMPUTER PROGRAMMING)
★ எலக்ரேனிக்ஸ் டிப்புளோமா (DIPLOMA IN ELECTRONICS-CITY and GUILDS PART II)
★ மெக்கானிக்கல் எஞ்சினியறிங் வேர்க்ஸ் (MECHANICAL ENGINEERING WORKS)
★ எலெக்ரிக்கல் எஞ்சினியறிங் வேர்க்ஸ் ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA
} 6 மாத கால பகுதி நேர வகுப்பு

★ படம் வரைதல் — பில்டர்ஸ் குவான்ரிற்றி உட்பட (DRAFTMAN SHIP — INCLUSIVE OF BUILDERS QUANTITIES) } 6 மாதகால கிழமையில் 5 நாள் வகுப்பு

★ கடைச்சல் யந்திரம் பயிற்சி (LATHE OPERATION) } 4 மாத காலம்
★ வெல்டிங் (ARE WELDING) } 3 மாத காலம்
★ றெவ்றிஜறேஷன் (REFRIGERATION) } 3 மாத காலம்
★ மின் இணைப்பு (ELECTRICAL WIRING) } 1 மாத காலம்
★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING) } 1 மாத காலம்

இவ் நிறுவனத்தில் மாத்திரம் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில்
28-06-1984க்கு முன் விண்ணப்பிக்கவும்.
ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேர் மட்டுமே சேர்க்கப்படுவர்.
இவ் 15 பேரும் விண்ணப்பம் முதல் கிடைக்கும் வரிசையிலேயே சேர்க்கப்படுவர்.
ஆகவே உடன் விண்ணப்பித்து ஏமாற்றத்தை தவிர்க்கவும்.

பதிவாளர்,
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்
59, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.


## 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பு

**ஆறுமுகம் நடராசா**
(பிரபல புகையிலை வியாபாரிசாமி)



தோற்றம்:
14 - 07 - 1928

மறைவு:
25 - 05 - 1984

அன்னரின் அந்தியேட்டி கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 24-6-84 நாளை நடைபெறும் மேற்படி வைபவங்களில் கலந்து கொள்ளுமாறு உற்றூர் உறவினர் நண்பர்களை அழைக்கின்ரேம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
டச்ரோட், கோப்பாய் தெற்கு. 432

## 31ம் நாள் நினைவஞ்சலி

எஸ். ஆர். எஸ். தேவபாலன் செந்தூரள்
கணக்கனர் கண்டி, காரைநகர்.



மண்ணுலகு:
28-11-1981

விண்ணுலகு:
24-05-1984

**செந்தூரன்**

எமது குடும்பமுதற் குலவிளக்கே!
மறைந்தும் மறையாத மாமணியே!
எமது செல்வக் குமரனய், செந்தூரனய்
வந்துதித்து வளமெலாம் வழங்கிய
தெய்வீகச் செல்வமே! தீந்தமிழின் நறுஞ்சுவையே!
நீர் விண்ணிடை அடைந்த போதும்
விரும்பிடும் எமது உள்ளத்தை நண்ணியே
பிரிந்திட்டாமல் நயந்துமே நாம் செய்யும்
நினைவினில் என்றும் வைத்தோம்
நிமலனர் திருவடியில் நீடுவாழ்க.

வலந்தலை, காரைநகர். 23-6-84.

எஸ். ஆர்.எஸ். தேவபாலன்
கமலலோஜினி தேவி குடும்பத்தினர்
428

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலென் தம்பதியினர் மீண்டும் இலங்கை வருவார்களாம்!

## வாஷிங்டனில் தகவல்!

வாஷிங்டன் ஜூன் 22 யாழ்ப்பாணத்தில் வைத்துக்கடத்தப்பட்ட அமெரிக்கத் தம்பதியான ஸ்டான்லி, மேரி அலென் ஆகியோர் மீண்டும் இலங்கை வரப்போவதாகக் கூறியுள்ளனர்.

வாஷிங்டன் 'விஸ்ரா, சர்வதேச ஹோட்டலில் இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனாவைக் கௌரவித்து விருந்துபசாரமொன்று வழங்கப்பட்டது. அவ்விருந்துபசாரத்திலேயே திரு. ஸ்டான்லி, அலென் ''நான் விரைவில் கொழும்பு செல்ல எண்ணியுள்ளேன்'' என்று பத்திரிகையாளர் ஒருவரிடம் கூறினார்.

''நான் யாழ்ப்பாணத்தில் முன்பு பணிபுரிந்த திட்டத்திலே மீண்டும் பணிபுரியமாட்டேன். ஆனால் வேறொரு அபிவிருத்தித்திட்டமொன்றில் இலங்கையில் பணிபுரிவேன்'' என்று திரு. ஸ்டான்லி அலென் கூறினார்.

தமது புதியபணி எத்தகைய திட்டத்தில் எங்கு இடம்பெறும் என்ற தகவல்களை அவர் விரிவாகக் கூறவில்லை.

ஆனால் யாழ்ப்பாணத்தில் தாம் பணிபுரிந்த அமெரிக்க உதவியுடனான நீர்வழங்கல் திட்டவேலைகள் தொடர்ந்து நடைபெறும் என்று அவர் கூறினார்.

திரு. ஸ்டான்லி, மேரி அலென் தம்பதிகள் இந்த விருந்துபசாரத்தில் பலரின் கவனத்தைப்பெற்றனர். அமெரிக்கர்களும், இலங்கையர்களும் இவர்களிடம் துருவித் துருவிப்பல கேள்விகளைக்கேட்டனர். [கி]

## முள்ளியான்—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யற்றவர்களுக்கு இரண்டு ஏக்கர் வீதம் வழங்கும் சங்கத்தின் தனாதிகாரியான இளைஞர் ஜனாப் எஸ். ஏ. ஸி. சகாப்தீனின் தன்னலமற்ற சேவையையும், அவருக்கு உதவியாக இருந்துபணிபுரியும் தலைவரான ஜனாப் வி. அபூபக்கரின் கடமை உணர்வையும் ஆலிம் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

இச் சங்கத்தின் காரியதரிசியாக ஜனாப் எஸ். எம். ஜெனூன் கடமையாற்றுகிறார்.

## நிர்மலா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகளுக்கு அனுப்பிவைத்திருக்கலாம்.

''தற்போது மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இருக்கும் சிங்கராயர்கூடமட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து மீட்கப்படலாம்.

''கண்காணிப்பு வலயம் இருந்து என்ன பயன்? கண்காணிப்பு வலயம் இருக்கத்தக்கதாக, பெண் ஒருவர் அவற்றை மீறிச்சென்று இருக்கிறார். நிர்மலா தப்பிச்சென்றிருக்கிறார்.

''ஜூலைக்கலவரங்களின் போது வெலிக்கடைச்சிறையில் வைக்கப்பட்டிருந்த 52 தமிழ்க் கைதிகள் கொலைசெய்யப்பட்டனர். உள்ளே இருந்தவர்களோ. வெளியே இருந்து சென்றவர்களோ இவர்களைக் கொன்றார்களென்றுதெரியாது. இதற்கு உடந்தையானவர்கள் யார் என்று அரசு கண்டுபிடிக்கவில்லை. எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

''நிதி அமைச்சர் பதவியைத் துறக்கவேண்டும்; அவர் அப்பதவியிலிருப்பதற்கு லாயக்கில்லை.

## வயோதிபர்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜேசுதாசன் கூட்டிவந்து கொழும்புத் துறையிலுள்ள வயோதிபர் இல்லத்தில் விட்டுச்சென்றாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

இறந்தவரின் கணவனான ரி. அந்தோனிப்பிள்ளை வயோதிபர் இல்லத்திற்குவந்து மனைவியைச் சந்தித்தபின் மகனை கடுமையாக பேசிவிட்டுச்சென்றாரென்றும், இதனால் இறந்தவர் கவலையடைந்திருந்தாரென்றும் கூறப்பட்டது. இதன் பின் அவர் கடுமையாக சுகவீனமுற்று மரணமானார்.

வயோதிபர் விடுதியில் இறந்தவரைச் சேர்த்ததற்கு இறந்தவரின் கணவனுக்கு சம்பந்தமில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (க)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப 2-30 மணிக்கு யாழ். திறந்த வெளியரங்கக் கூட்ட அறையில்கலைப் பேரரசு ஏ.ரி பொன்னுத்துரை தலைமையில் நடை பெறும்.

இக்கூட்டத்தில்புதியநிர்வாக சபை தெரிவு செய்யப்படுவதுடன் வட்டத்தின் செயற்திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்படும்.

## பம்பாயில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சாப்பிலுள்ள சீக்கியத் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த அமிர்தசரஸ் பொற்கோயிலிலிருந்து பாகிஸ்தான் முத்திரை பொறிக்கப்பட்ட ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டது தெரிந்ததே. (வெ)

## 'நதிக்கரை மூங்கில்' அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் சிவசேகரத்தின் 'நதிக்கரை மூங்கில்' (கவிதைத் தொகுதி) அறிமுகமும் ,விமர்சனமும் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

திரு.இ. முருகையின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் திரு ஏம். ஏ. நுஃமான், திரு இ. சிவானந்தன், திரு யோ. பெனடிற்பாலன், திரு .என். ரவீந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்குவார். (சூ)

## பல்கலைக்கழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்திற்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. மாணவர்களைக் குழப்பத்தில் ஈடுபடுத்துவதுடன், தொழிற்சங்கங்களையும் வன்செயல்களில் ஈடுபடுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதொடர்பாக தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

### ஆயுதங்கள் குண்டுகள்

''ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு நானும், கல்வி அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்காவும் சென்றிருந்தபோது அங்கு கண்டுபிடிக்கப்பட்ட பெற்றோல் குண்டுகளையும், ஆயுதங்களையும் பார்வையிட்டோம்.

### அரசுக்கு எதிரான சக்திகள்

''அரசுக்கு எதிரானசக்திகள் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்த முயற்சிக்கின்றன. இதில் சில அரசியல்கட்சிகளுக்கும் சம்பந்தம் உண்டு. ஆனால் நான் எந்தக்கட்சி என்று முத்திரை குத்த விரும்பவில்லை. அரசு எதற்கும் தயாராக இருக்கிறது. எதனையும் சமாளிக்க நாம் தயாராக இருக்கின்றோம்'' என்று அமைச்சர் லலித் தெரிவித்தார்.

## கொள்ளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடும்' என்று கூறி பையை இறுகப்பிடித்தபடி குப்புறப் படுத்துக் கொண்டார்' என்று கூறப்படுகிறது.

ஒருவர் 'விடடா' என்று கூறியபோது அவர் பணப்பையை விடவில்லையென்றும் மற்றவர் 'சுடடா' என்று கூறியதாகவும், ஆகாயத்தை நோக்கி சுட்டுவிட்டு மீண்டும் சுட்டபோது துப்பாக்கி இயங்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

வெடிச்சத்தம் கேட்டு சக ஊழியர்களும், உதவி அரசாங்க அதிபர் காரியாலய ஊழியர்களும், ப. நோ. கூ. ச. மின்தறி ஆலைஊழியர்களும் அங்கு திரண்டு அந்த இரண்டு இளைஞர்களையும் விசாரித்த போது, இருவரும் ஓடியதாகவும், சுமார் 300 யார் பொதுமக்கள் துரத்திச் சென்றபோது சைக்கிளில் அவர்கள் ஏறி ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது. (க)

## லலித் விஜயம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இம்மாதம் 30-ம் திகதி புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பது தெரிந்ததே. (வெ)

## மரண அறிவித்தல்

### சே. பொ. சண்முகநாதன்

இளைப்பாறிய நீர்ப்பாசன என்ஜினியர் சே. பொ. சண்முகநாதன் நைஜீரியாவில் காலமானார். இவருக்கு மனைவி மகேஸ்வரி கணவருடன் நைஜீரியாவில்; மக்கள் ஷேத்திரன் (அயர்லன்ட்), செங்குட்டுவன் (பொறியியலாளர் லண்டன்), உடன்பிறந்தார் பரமேஸ்வரியும் கேதாரநாதனும் (வேலணை), மைத்துனர் பத்மநாதன் (பட்டயக்கணக்காளர் லண்டன்), கந்தையா (சிறுப்பர் வேலணை), மைத்துனி நகுலேஸ்வரி இரத்தினப்பிரகாசம் (கொழும்பு). இவர் பிறந்த இடம் வேலணை, புகுந்த இடம் கந்தர்மடம், யாழ்ப்பாணம். தகனம் இன்று (சனிக்கிழமை 23-6-84) நைஜீரியாவில் நிகழவிருக்கின்றது.

வேலணை. பொ. கேதாரநாதன்.

387

## மரண அறிவித்தல்

### சி. சுந்தரம்

மறவன்புலோ சி. சுந்தரம் காலமானார். இவர் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி சின்னத்தம்பி தம்பதிகளின் புதல்வரும் கனகம்மாவின் அன்புக்கணவரும், இராசையா (வைத்திய கலாநிதி) சடாட்சரம் (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் சகோதரரும், தம்பித்துரை (ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி) நாகராசா (இ. போ. ச.) பாலசிங்கம் (யாழ். மாநகரசபை) கணபதிப்பிள்ளை (நூலகர் ஸ்கந்தவரோதயக்கல்லூரி) சண்முகலிங்கம் (ஜேர்மனி) சந்திரன், ஜெயசிங்கம், மாணிக்கவல்லி சிவலிங்கம், உருத்திரா பாலச்சந்திரன், ஜெயந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவலிங்கம் (தந்தி தொலைத் தொடர்பு தலைமை அலுவலகம், கொழும்பு) பாலச்சந்திரன் (ஈழநாடு) ஞானபூபதி தம்பித்துரை, நாகராசா கண்மணி, புஸ்பராணி பாலசிங்கம், கமலாதேவி கணபதிப்பிள்ளை ஆகியோரின் மாமனாரும், நவீனகுமார் (மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்) ரவீந்திரகுமார், நித்தியகுமார், கலைரதன், சிவகுமார், நிதர்ஸன், சுபாஜினி, நித்யா, தயாளினி, லோகிதா, சர்மினி ஆகியோரின் பேரனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23 - 6 - 1984) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

க. பாலச்சந்திரன், மறவன்புலவு மேற்கு, சாவகச்சேரி. [453]

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை கதிரவேலு

கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கதிரவேலு காலமானார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், மணிமொழியின் தகப்பனாரும், சுப்பிரமணியத்தின் (நிலஅளவையாளர் சவூதி) மாமனாருமாவார். அன்னாரது ஈமக் கிரியைகள் சுண்ணாகம் கிழக்கில் 23 - 6 - 84 இன்று மாலை 4-00 மணியளவில் கொத்தியாலடியில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவியும், மகளும்

454

## மரண அறிவித்தல்

### திரு. செல்லப்பா மயில்வாகனம்

அளவையூர் பெரியார் திரு. செல்லப்பா மயில்வாகனம் அவர்கள் 22-6-84 வெள்ளிக்கிழமை மாலை காலமானார். அவர் காலஞ்சென்ற முன்னைநாள் அரசாங்க அதிபரும், நிரந்தரக் காரியதரிசியுமாகிய திரு. ஸ்ரீ காந்தா அவர்களின் அருமைத் தந்தையும், திருமதி மகேஸ்வரி ஸ்ரீ காந்தா அவர்களின் மாமனும், மாலினிதேவி இராசநாயகம், யோகலிங்கம் ஸ்ரீ காந்தா, ஜனகன் ஸ்ரீ காந்தா ஆகியோரின் அருமைப் பேரனுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-6-84 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி கூட்டுறவாளர் வீதியிலுள்ள அன்னாரின் மருமகன் திரு யோகசுந்தரம் அவர்களின் இல்லத்தில் காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 455

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் செல்லையா

திருமதி பாக்கியம் செல்லையா காலமானார். அன்னார் காலம் சென்ற கணபதிப்பிள்ளை செல்லையாவின் அன்பு மனைவியும், காலம் சென்ற செல்வமணி, திலகவதி, பரமநாதன், மகேஸ்வரி (லண்டன்), ஜெயலட்சுமி, சிவானந்தன் (மக்கள் வங்கி பிரதான வீதி யாழ்ப்பாணம்), அருளானந்தன் (மேற்கு ஜேர்மனி), சதானந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் தாயாரும், வையிரமுத்து (தந்திதபால் திணைக்களம்) சோ. யோகநாதன் (இளைப்பாறிய மாவட்ட நீதிபதி), மகேந்திரன் (பொறியியலாளர்) செல்வநாயகம்,(இ. போ. ச.)பொலநறுவை, ஜோய்ஸ் சுகிர்தரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் 23-6-84 சனிக்கிழமை 1மணியளவில் பண்டியன்தாழ்வு சுண்டிக்குளியில் இருந்து ஈமக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர் இத்த கவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் செ. சிவானந்தன் 456

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூன் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu. Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org